ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2258/25 - 2021 දෙසැම්බර් මස 15 වැනි බදාදා - 2021.12.15

2258/25 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 15 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### மேல் மாகாண மாகாண சபை

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 இ உறுப்புரையுடன் வாசிக்கப்பட வேண்டிய இடைக்கிடையே திருத்தப்பட்ட மேல் மாகாண சபையின் 1992 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வீதிப் பயணிகள் போக்குவரத்து சேவை நியதிச்சட்டத்தின் 30 ஆவது பிரிவின் கீழேயான விதிகள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 இ உறுப்புரையுடன் வாசிக்கப்பட வேண்டிய இடைக்கிடையே திருத்தப்பட்ட மேல் மாகாண சபையின் 1992 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வீதிப் பயணிகள் போக்குவரத்து சேவை நியதிச்சட்டத்தின் 30 ஆவது பிரிவின் கீழ் மேல் மாகாணத்தின் ஆளுநராக எனக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கிணங்க தயாரிக்கப்பட்ட மேல் மாகாணத்தில் முச்சக்கர வண்டிகள் மற்றும் வாடகை வண்டிகளின் மூலம் பயணிகள் போக்குவரத்து சேவை ஒன்றினைப் பேணிச் செல்வது தொடர்பான பின்வரும் விதிகளை இங்கு வெளியிடுவதாக அறிவிக்கின்றேன்.

**றொஷான் குணதிலக,**
ஆர்டப்பீ அண்ட் பார் வீஎஸ்வி யூஎஸ்பி
பீஎச்டி ( சிறப்பு) எப்ஐஎம் (ஸ்ரீலங்கா) என்டிசீ பீஎஸ்சீ
விமானப் படையின் மார்ஷல்,
ஆளுநர்,
மேல் மாகாணம்.

மேல் மாகாண ஆளுநர் காரியாலயம்,
மேல் மாகாண சபைக் கட்டடம்,
பத்தரமுல்லை,
2021, திசெம்பர் 09.

1A - PG 5662 - 50 (2021/12)

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**விதிகள்**

1. இந்த விதிகள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1834/27 ஆம் இலக்க, 2013 ஒற்றோபர் 30 ஆந் திகதி அதி விஷேட வர்த்தமானப் பத்திரிகையில் உள்ளடக்கப்பட்டிருந்த முச்சக்கர வண்டிகள் மற்றும் வாடகை வண்டிகளில் பயணிகளை ஏற்றிச் செல்லுதல் தொடர்பான விதிகள் எனப் பெயர் கொண்ட விதிகளை இல்லாதொழிப்பதற்காக அமுல்படுத்தப்படுகின்றது;

2. இந்த விதிகள் "முச்சக்கர வண்டிகள் மற்றும் வாடகை வண்டிகளின் மூலம் பயணிகளை ஏற்றிச் செல்லுதல் தொடர்பான விதிகளை இல்லாதொழிப்பது தொடர்பான விதிகள்" என அழைக்கப்படும்;

3. இந்த விதிகள் நடைமுறைக்கு வரும் தினத்தில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1834/27 ஆம் இலக்க, 2013 ஒற்றோபர் 30 ஆந் திகதி அதி விஷேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள முச்சக்கர வண்டிகள் மற்றும் வாடகை வண்டிகளின் மூலம் பயணிகளை ஏற்றிச் செல்லுதல் தொடர்பான விதிகள் இங்கு இல்லாதொழிக்கப்படுகின்றன;

4. இந்த நியதிச்சட்டத்தின் கீழ் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில சொற்களுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படுமிடத்து, அப்போது சிங்கள சொல்லே அதிகாரம் பெற வேண்டும்.

EOG 12 - 0149/1

---

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 ஊ உறுப்புரையுடன் வாசிக்கப்பட வேண்டிய மேல் மாகாண சபையின் 2002 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க வீதிப் பயணிகள் போக்குவரத்து முச்சக்கர வண்டிகள் சேவை நியதிச்சட்டத்தின் 16 ஆம் பிரிவின் கீழ் தயாரிக்கப்படும் ஒழுங்கு விதிகள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 ஊ உறுப்புரையுடன் வாசிக்கப்பட வேண்டிய மேல் மாகாண சபையின் 2002 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க வீதிப் பயணிகள் போக்குவரத்து முச்சக்கர வண்டிகள் சேவை நியதிச்சட்டத்தின் 7 ஆம் பிரிவு அத்துடன் 16 ஆம் பிரிவின் கீழ் மேல் மாகாணத்தின் ஆளுநரான எனக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு இணங்க தயாரிக்கப்பட்ட மேல் மாகாணத்தில் முச்சக்கர வண்டிகளின் மூலம் பயணிகள் போக்குவரத்து சேவைகளை பேணிச் செல்வது தொடர்பான பின்வரும் விதிகளை இங்கு வெளியிடுவதாக அறிவிக்கின்றேன்.

**றொஷான் குணதிலக,**
ஆர்டப்பீ அண்ட் பார் வீஎஸ்வி யூஎஸ்பி
பீஎச்டி ( சிறப்பு) எப்ஜஎம் (ஸ்ரீலங்கா) என்டிசீ பீஎஸ்சீ
விமானப் படையின் மார்ஷல்,
ஆளுநர்,
மேல் மாகாணம்.

மேல் மாகாண ஆளுநர் காரியாலயம்,
மேல் மாகாண சபைக் கட்டடம்,
பத்தரமுல்லை,
2021, திசெம்பர் 09.

**விதிகள்**

1. மேல் மாகாணத்தில் கட்டணம் அல்லது பலாபலனை எதிர்பார்த்து பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடுத்தப்படும் முச்சக்கர வண்டிகளை அந்த விடயங்களில் ஈடுபடுத்துவதற்கு உரியதாக பதிவு செய்தல் மற்றும் அந்த விடயங்களில் ஈடுபடுவதற்குரியதான அனுமதிப் பத்திரங்களை வழங்குவது உள்ளடங்கலாக அதனோடு தொடர்புடைய விடயங்களுக்கு ஏற்பாடுகளை வழங்குவதற்காக இந்த விதிகள் அமுல்படுத்தப் படுகின்றன.

2. இந்த விதிகள் “மேல் மாகாணத்தின் முச்சக்கர வண்டிகளின் மூலம் பயணிகள் போக்குவரத்து சேவைகளை பேணிச் செல்வது தொடர்பான விதிகள்” என்று அழைக்கப்படும்.

3. மேல் மாகாணத்தில் கட்டணம் அல்லது பலாபலனை எதிர்பார்த்து பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடுத்தப்படும் ஒவ்வொரு முச்சக்கர வண்டியும் இதன் பின் முச்சக்கர வண்டி பணியகத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு, இவ் விதிகளின் கீழ் முதலாம் அட்டவணைக்கு உள்ளடக்கப்பட்டுள்ள படிவத்திற்கு இணங்கியதான பயணிகள் சேவை அனுமதிப் பத்திரத்தினைப் பெற்ற முச்சக்கர வண்டியாக வேண்டும்.

4. 2002 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க வீதிப் பயணிகள் போக்குவரத்து முச்சக்கர வண்டி சேவை நியதிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்வதற்காக பயணிகள் சேவை அனுமதிப் பத்திரத்திற்கு விண்ணப்பிக்கும் எவரும் பின்வரும் நிபந்தனைகளை இங்கு பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

(1) பதிவு செய்வதற்காக மேற்கொள்ளப்படும் அனைத்து வேண்டுகோள்களும் இந்த விதிகளின் கீழ் விதிக்கப்பட்டுள்ள இரண்டாவது அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ள படிவத்தின் படியிலான ஒரு விண்ணப்பப் படிவத்தின் கீழ் செய்யப்பட வேண்டும்.

(2) பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடுத்தப்படும் முச்சக்கர வண்டிகள், அவ்வாறான சேவைகளில் ஈடுபடுத்துவதற்கு உரிய தகைமை தொடர்பான பதிவிற்காக வேண்டுகோள் விடுக்கும் தினத்திற்கு முன்னதான மூன்று மாதங்களுக்குள் மேல் மாகாணத்தின் மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட தகைமைச் சான்றிதழின் மூலம் தகைமையினை உறுதிப்படுத்தி இருக்க வேண்டும்.

(3) உரிய விடயத்தில் ஈடுபடுத்தப்படும் முச்சக்கர வண்டி முழுமையான வரையறையற்ற காப்புறுதி காப்பீட்டிற்கு உட்பட்டிருக்க வேண்டும்.

(4) முச்சக்கர வண்டிக்காக நடப்பு ஆண்டிற்கான இறைவரி அனுமதிப் பத்திரம் பெறப்பட்டிருக்க வேண்டும்.

(5) உரிய முச்சக்கர வண்டிக்கான விண்ணப்பதாரர் பயணிகள் போக்குவரத்து நோக்கத்திற்காக முச்சக்கர வண்டி சாரதியாக பணியகத்தின் பதிவு செய்யப்பட்ட சாரதியாக இல்லாவிட்டால் அவர் தற்போது ஈடுபடுத்தப்படும் சாரதி பணியகத்தின் பதிவு செய்யப்பட்ட சாரதி என்பதை நிரூபிக்க தொடர்புடைய ஆவணங்களின் மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.

(6) விண்ணப்பதாரர் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக இருக்கும் போது கம்பனி ஒன்றாக பதிவுச் சான்றிதழினை முன்வைக்க வேண்டும்.

5. பணியகத்தின் கீழ் பதிவு செய்யப்படும் ஒவ்வொரு முச்சக்கர வண்டிக்காகவும் பதிவு செய்யப்பட்ட தினத்திலிருந்து நடைமுறைக்கு வருமாறு அடுத்த 12 மாதங்களுக்கு பொருந்தக் கூடிய பயணிகள் சேவை அனுமதிப் பத்திரம் ஒன்று பணியகத்தின் பிரிவுத் தலைவரினால் வழங்கப்பட வேண்டும்.

6. பதிவு செய்வதற்குரியதாக விடுக்கப்படும் வேண்டுகோள் நிராகரிக்கப்படுவதில் அதிருப்தி அடைந்த ஒருவர் நிராகரிக்கப்பட்ட தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் உரிய மேன் முறையீடு ஒன்றினை மேல் மாகாணத்தின் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் பொது முகாமையாளருக்கு முன்வைக்க இயலும்.

7. மேலே 6 ஆம் பிரிவின் கீழேயான மேன் முறையீட்டிற்குரிய முடிவுகள் மேன் முறையீடு சமர்ப்பிக்கப்பட்டு 30 நாட்களுக்குள் மேன் முறையீட்டாளருக்கு அறிவிக்கப்பட வேண்டியதுடன், உரிய வேண்டுகோள் தொடர்பாக பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் பொது முகாமையாளரின் முடிவு இறுதி முடிவாகக் கருதப்பட வேண்டும்.

8. இந்த விதிகளின் கீழ் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் பெற்ற ஒவ்வொரு முச்சக்கர வண்டியும் மேல் மாகாணத்தினுள் பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் போது பின்வரும் நிபந்தனைகளுக்கு இணங்க உரிய சேவைகளைப் பேணிச் செல்ல வேண்டும்.

(1) பயணிகளை ஏற்றிச்செல்லும் போது முச்சக்கர வண்டியில் கொண்டு செல்லக்கூடிய பயணிகளின் உச்சமான எண்ணிக்கையானது மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் அனுமதிக்கப்பட்ட பயணிகளின் எண்ணிக்கைக்கு மேற்படாதபடியோ அல்லது காலத்திற்குக் காலம் ஏதாவது எழுத்து மூலமான சட்டத்தின் கீழ் பணிக்கப்படும் பயணிகளின் எண்ணிக்கையினை விட அதிகமாகவோ கூடாது.

(2) பயணிகள் போக்குவரத்துச் சேவைக்காக செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் உள்ள அந்த விடயத்திற்காக தற்போது பணியகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள சாரதியின் கீழ் சேவைகளை மேற்கொண்டு செல்வது இடம்பெற வேண்டும்.

(3) சேவையில் ஈடுபடுத்தப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உரிய முச்சக்கர வண்டியானது வரையறையற்ற காப்புறுதி காப்பீட்டினைக் கொண்டு இருக்க வேண்டும்.

(4) பயணிகள் போக்குவரத்துச் சேவைக்காக ஈடுபடுத்தப்படும் ஒவ்வொரு முச்சக்கர வண்டியினதும் பின்புற வலது பக்க கதவு மூடப்பட்டிருக்க வேண்டும்.

(5) பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும்போது ஒவ்வொரு வேளையிலும் போக்குவரத்து செயற்பாட்டில் ஈடுபடும் சாரதி பணியகத்தினால் வழங்கப்படும் அடையாள அட்டையை அணிந்திருக்க வேண்டும்.

(6) பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் ஒவ்வொரு முச்சக்கர வண்டியும் அந்த முச்சக்கர வண்டியில் பயணிப்பவர்களுக்கு இலகுவாகத் தெரியும்படி பின்வரும் தகவல்களை காட்சிப்படுத்தி யிருக்க வேண்டும்.

(அ) முச்சக்கர வண்டி உரிமையாளரின் பெயர், முகவரி அத்துடன் தொலைபேசி இலக்கம்;

(ஆ) சேவையில் ஈடுபடும் சாரதியின் பெயர், முகவரி அத்துடன் தொலைபேசி இலக்கம்;

(இ) முச்சக்கர வண்டியின் பணியகத்தின் பதிவு இலக்கம் அத்துடன் சாரதியின் பதிவு இலக்கம்;

(ஈ) சாரதியின் புகைப்படம்.

(7) உரிய கட்டண அளவிற்கு இணங்க பயணிகள் போக்குவரத்திற்கான கட்டணத்தினை நிர்ணயிப் பதற்கு ஏற்ற முறையில் கட்டணம் அறவிடுவதை காட்சிப்படுத்துவதற்காக கட்டண மீற்றர் பொருத்தப்பட்டிக்க வேண்டும்.

(8) பயணிகள் போக்குவரத்துச் சேவைக்காக அத்தினத்திற்குரிய கட்டணத்தின் அளவு முச்சக்கர வண்டியின் முன் இடதுபக்க மேல் மூலையில் தெளிவாகக் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

(9) போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் ஒவ்வொரு வேளையிலும் இங்கு கீழ் காணப்படும் ஆவணங்கள் சாரதியின் பொறுப்பில் பேணப்பட வேண்டும்.

(அ) பயணிகள் போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரம்;

(ஆ) எல்லா பயணிகளுக்கும் முழுமையான அத்துடன் வரையறையற்ற காப்புறுதிச் சான்றிதழ்;

(இ) செல்லுபடியான இறைவரி அனுமதிப்பத்திரம்;

(ஈ) சாரதி அனுமதிப் பத்திரம் பணியகப் பதிவு அடையாள அட்டை.

(10) அனுமதிப்பத்திரம் உள்ளடங்கலாக காட்சிப்படுத்தப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்படும் பகுதி தெளிவாகத் தெரியக்கூடியவாறு முச்சக்கர வண்டியின் முன்பக்கம் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

(11) பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் ஒவ்வொரு முச்சக்கர வண்டியும் பயணிகளின் நன்மைக்காக மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழேயான கட்டளைகளுக்கு இணங்க இருக்கைகள் உள்ளடங்கலாக ஏனைய எல்லா வசதிகளையும் பேணிச்செல்ல வேண்டும்.

(12) பயணிகள் போக்குவரத்துச் சேவையில் பயன்படுத்தப்படும் முச்சக்கர வண்டியின் கீழ் சேவைகளை எதிர்பார்க்கும் பயணிகளின் மற்றும் பொது மக்களின் நன்மைக்கு பாதிப்பு ஏற்படும் முறையில் அல்லது நல்வாழ்வுக்கு இடையூறு ஏற்படும் வகையில் அல்லது நெறிமுறையற்ற வகையில் அல்லது உடல் அல்லது உள ரீதியில் துன்புறுத்தல் ஒன்று ஏற்படும் வகையில் ஒலி எழுப்புதல் அல்லது திரைப்படம் ஒன்றினைக் காண்பித்தல் அல்லது படம் ஒன்றினைக் காட்டுதல் அல்லது ஏதாவது தகவல் ஒன்றினைக் காட்டுதல் செய்யக்கூடாது.

9. பயணிகள் போக்குவரத்துச் சேவைகளுக்கான பதிவுக்காக ஒரு நபர் பல முச்சக்கர வண்டிகளுக்கு விண்ணப்பிக்கும் போது, அவ்வாறு வேண்டுகோள் விடுக்கும் ஒவ்வொரு முச்சக்கர வண்டிகளுக்கும் வெவ்வேறாக விண்ணப்பம் செய்யப்பட வேண்டும். அவ்வாறான ஒவ்வொரு பதிவுகளும் அத்துடன் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் வழங்கல்களும் வெவ்வேறான சேவைகளாகக் கருதி செயற்பட வேண்டும்.

10. எந்தவொர முச்சக்கர வண்டிக்கும் பெறப்பட்ட அனுமதிப்பத்திரம் அனுமதிப்பத்திரத்திற்குரிய பதிவு செய்யப்பட்ட முச்சக்கர வண்டியின் பயன்பாட்டிற்கு மட்டுமே உரியதாக்குவதுடன், எந்த சூழ்நிலையிலும் அது வேறு எந்த பயன்பாட்டிற்கும் பயன்படுத்தப்படக்கூடாது.

11. வழங்கப்பட்ட பயணிகள் போக்குவரத்துச் சேவை அனுமதிப் பத்திரத்திற்குரிய கால எல்லையினுள் பணியகத்தின் முழு அனுமதியின்றி அனுமதிப்பத்திரத்தினை எந்த வகையிலும் மற்றவர்களுக்கு கையளிக்க முடியாது.

12. பின்வரும் சந்தர்ப்பங்களில், பணியகத்தில் பதிவு செய்யப்பட்ட ஒரு முச்சக்கர வண்டி தொடர்பான பதிவு மற்றும் அதன் கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் செல்லுபடி அற்றது எனக் கருதப்பட வேண்டும்.

(1) பதிவு செய்யப்பட்ட உரிமையாளர் அல்லது சாரதியால் 2002 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க வீதிப் பயணிகள் போக்குவரத்துச் சேவை நியதிச்சட்டத்தை மீறியது அல்லது அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகளை மீறியதற்குரிய சந்தர்ப்பங்கள் 03 அல்லது அதற்கு மேற்பட்ட முறை குற்றவாளியாகி இருத்தல்.

(2) முச்சக்கர வண்டியின் பதிவு உரிமையை மாற்றுதல்.

(3) பதிவுடன் தொடர்புடைய முச்சக்கர வண்டி எந்தவொரு குற்றச் செயலுக்கு அதன் உரிமையாளர் அல்லது சாரதியால் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று நீதிமன்றத்தின் முன் விடயங்கள் உறுதிப் படுத்தப்படும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும்.

13. மேலே உள்ள பிரிவு 12 இன் கீழ் இந்த விதிகளின் கீழ் பதிவு மற்றும் அதன் கீழ் உள்ள அனுமதிப்பத்திரம் ஆகியவை இரத்து செய்யக் கூடிய விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ள ஏதாவது ஒரு சந்தர்ப்பத்திலும் சம்பந்தப்பட்ட முச்சக்கர வண்டியின் பதிவு மற்றும் அதற்குரிய அனுமதிப்பத்திரத்தினை இரத்துச் செய்வது பணியகத்தின் பிரிவுத் தலைவரின் கடமையாகுவதுடன் அத்தகைய முடிவு தொடர்பாக பதிவு செய்யப்பட்டுள்ளவர்களுக்கு பதிவுத் தபால் மூலம் அறிவிப்பதற்கு பிரிவு தலைவர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

14. மேலே உள்ள பிரிவு 13 ஆவது பிரிவின் கீழ் பிரிவுத் தலைவர் எடுத்த முடிவில் அதிருப்தி அடைந்த ஒருவர், சம்பந்தப்பட்ட அறிவிப்பின் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் அதிகார சபையின் பொது முகாமையாளரிடம் மேன் முறையீடு செய்யலாம், மேலும் அந்த மேன் முறையீடு தொடர்பாக பொது முகாமையாளரின் முடிவு இறுதியானதாகும்.

15. மேற்கூறிய பிரிவு 13 இன் கீழ் பதிவை மற்றும் அனுமதிப்பத்திரத்தினை இரத்து செய்வதற்கான முடிவுக்கு உரியவரான முச்சக்கர வண்டியின் பதிவாளர் 2002 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க வீதிப் பயணிகள் போக்குவரத்து முச்சக்கர வண்டி சேவை நியதிச்சட்டத்தின் கீழ் அல்லது அதற்கு உரித்தான ஏதாவதொரு நியதிச்சட்டத்தின் கீழ் மேல் மாகாணத்தினுள் முச்சக்கர வண்டி ஒன்றின் மூலம் போக்குவரத்து சேவை ஒன்றினைப் பேணிச்செல்வதற்காக பதிவு ஒன்று அல்லது அனுமதிப் பத்திரம் ஒன்றுக்காக வேண்டுகோள் விடுப்பதற்கு அந்த அனுமதிப் பத்திரம் இரத்துச் செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர்ச்சியாக 03 ஆண்டுகளுக்குள் தகுதியற்றவராக இருக்க வேண்டும்.

16. பயணிகள் போக்குவரத்திற்காக பதிவு செய்யப்பட்ட முச்சக்கர வண்டியின் செல்லுபடியாகும் காலத்தை நீடிப்பதற்கான அனைத்து கோரிக்கைகளும் அனுமதிப் பத்திரத்தின் செல்லுபடியாகும் காலம் முடிவடைவதற்கு முன்னர் 02 மாத காலத்திற்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

17. மேலே உள்ள பிரிவு 16 இன் கீழ் செய்யப்படும் அனைத்து கோரிக்கைகளும் இந்த விதிகளின் கீழேயான 04 ஆம் பிரிவுக்கு உரியதாக வேண்டும்.

18. அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியாகும் காலத்தினை நீடிப்பதற்காக தாமதமாகி முன்வைக்கப்படும் ஒவ்வொரு வேண்டுகோள்களும் அதற்காக அறவிட பணிக்கப்பட்ட கட்டணத்திற்கு மேலதிகமாக கூடுதல் கட்டணத்துடன் உரிய விண்ணப்பங்களை ஏற்றுக் கொண்டு செயற்படுவதற்கு இந்த விதிகளின் கீழ் ஒரு தடையாக இருக்கக்கூடாது.

19. முச்சக்கர வண்டியின் மூலம் பணம் அல்லது இலாபத்தினை எதிர்பார்த்து பயணிகள் போக்குவரத்து சேவையினை பேணிச் செல்வதற்காக ஈடுபடுத்தப்படும் ஒவ்வொரு முச்சக்கர வண்டியினதும் சாரதியும் பணியகத்தில் பதிவு செய்யப்பட்ட சாரதியாக இருக்க வேண்டும்.

20. மேலே உள்ள பிரிவு 19 ஆவது பிரிவின் கீழ் பதிவு செய்ய விண்ணப்பிப்பவர்கள் அனைவரும் பணியகம் பரிந்துரைத்த விண்ணப்பப்படிவத்தின் மூலம் அதற்காக விண்ணப்பிக்க வேண்டும்.

21. மேலே உள்ள பிரிவு 19 ஆவது பிரிவின் கீழேயான செயற்பாடுகளுக்கு விண்ணப்பிக்கும் அனைத்து நபர்களும் பின்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்யாவிட்டால் அதற்காக தகுதி பெற்றவராகக் கூடாது.

    (1) மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் மற்றும் அதன் கீழ் தயாரிக்கப்பட்ட விதிகளின் கீழ் மேற்கொள்ளப்படும் உத்தரவுகளுக்கு ஏற்ப தேவைகளை பூர்த்தி செய்தவராக இருக்க வேண்டும்.

    (2) மோட்டார் வாகனச் சட்டம் மற்றும் அதன் கீழ் செய்யப்பட்ட விதிமுறைகளின்படி முச்சக்கர வண்டியை செலுத்துவதற்கு செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம் இருப்பவராக இருக்க வேண்டும்.

    (3) விண்ணப்ப திகதிக்கு ஒரு மாத காலத்திற்கு முன் நல்ல நடத்தை உள்ளவர் என அங்கீகரிக்கப்பட்ட நபரால் சான்றளிக்கப்பட்டவராக வேண்டும்.

    (4) பணியகத்தினால் விண்ணப்பத்தின் கீழ் பணிக்கப்படும் தேவைகளை முறையாக பூர்த்தி செய்வதன் மூலம் பதிவு செய்ய விண்ணப்பித்தவராக இருக்க வேண்டும்.

    (5) வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்காக கிராம அலுவலகரினால் வழங்கப்படும் சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

22. மேலே உள்ள பிரிவு 21 இன் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பம் பணியகத்தின் பிரிவுத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டால், இந்த விதிகளின் கீழ் மூன்றாம் அட்டவணைக்கு ஏற்ப பூர்த்தி செய்யப் பட்டதற்கான சான்றிதழ் விண்ணப்பதாரருக்கு வழங்கப்பட வேண்டும்.

23. மேலே உள்ள பிரிவு 21 இன் கீழ் விண்ணப்பத்தை நிராகரிப்பதில் தகுதிவாய்ந்த அதிகாரியின் முடிவில் அதிருப்தி அடைந்த ஒருவர், நிராகரிப்பு அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் பொது முகாமையாளருக்கு மேல் முறையீட்டை தாக்கல் செய்யலாம் அது தொடர்பாக பொது முகாமையாளரின் முடிவு இறுதி முடிவாக கருதப்பட வேண்டும்.

24. மேலே 22 ஆவது பிரிவின் கீழ் செய்யப்பட்ட பதிவை பின்வரும் சந்தர்ப்ப சூழ்நிலைகளின் கீழ் பணியகத்தின் பிரிவுத் தலைவரினால் இரத்து செய்வது சட்டபூர்வமானது.

(1) பதிவு செய்யப்பட்ட நபர் மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் அல்லது அதன் கீழ் செய்யப்பட்ட உத்தரவை மீறி தொடர்ந்தும் செயல்படுவதாக பிரிவுத் தலைவர் திருப்தி அடைந்த சந்தர்ப்பம் ஒன்றில்.

(2) பதிவுசெய்யப்பட்ட நபர் ஒரு குற்றவியல் குற்றத்திற்காக நீதிமன்றத்தால் குற்றவாளியாகக் காணப்பட்ட போது.

(3) பதிவு செய்யப்பட்டுள்ள நபர் பணிமனையினால் பணிக்கப்பட்டுள்ள கட்டளைகளுக்கு அல்லது 2002 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க வீதிப் பயணிகள் போக்குவரத்து முச்சக்கர வண்டி சேவை நியதிச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அல்லது இந்த விதிகளின் கீழேயான ஏற்பாடுகளுக்கு முரணான முறையில் தொடர்ந்தும் செயற்படுவதாக பிரிவுத் தலைவர் திருப்தி அடையும் சந்தர்ப்பத்தில்.

25. மேலே உள்ள 24 ஆவது பிரிவின் கீழ் பதிவை இரத்து செய்வதற்கான முடிவில் அதிருப்தி அடைந்த ஒருவர் அதற்குரிய மேன்முறையீட்டை முடிவை அறிவித்த நாளிலிருந்து 30 நாட்களுக்கும் பொது முகாமை யாளரிடம் முறையீடு செய்யலாம். இது தொடர்பாக பொது முகாமையாளரின் முடிவு இறுதியான முடிவாக வேண்டும்.

26. பயணிகள் போக்குவரத்து செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள ஒரு முச்சக்கர வண்டி அவ்வாறு பயணத்தில் ஈடுபடும் எந்த சந்தர்ப்பத்திலும் அல்லது பயணத்தினை ஆரம்பிப்பது நிறுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பத்திலும், 2002 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க வீதிப் பயணிகள் போக்குவரத்து முச்சக்கர வண்டி சேவை நியதிச் சட்டத்தின் கீழ் அல்லது இந்த விதியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகள் பூரணப்படுத்தப்பட்டு பயணிகள் போக்குவரத்து செயற்பாட்டில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதா என்பது பணிமனையின் பிரிவுத் தலைவரினால் அல்லது அவரினால் அதிகாரம் அளிக்கப்பட்ட அதிகார சபையின் எந்தவொரு அலுவலகர் ஒருவரினாலும் பரிசோதித்துப் பார்ப்பது அல்லது அதற்குரிய ஆவணங்களை கேட்டுக்கொள்வது சட்டபூர்வமானதாகும்.

27. 2002 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க வீதிப் பயணிகள் போக்குவரத்து முச்சக்கர வண்டி சேவை நியதிச் சட்டத்தின் விடயங்களுக்காக அறவிடப்பட வேண்டிய கட்டணம் பின்வருமாறு அமைய வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| i. | முச்சக்கர வண்டி பதிவுக் கட்டணம் | ரூ. | 500.00 |
| ii. | வருடாந்த பயணிகள் போக்குவரத்து சேவை அனுமதிப் பத்திரக் கட்டணம் | ரூ. | 1000.00 |
| iii. | பயணிகள் சேவை அனுமதிப் பத்திரத்தின் செல்லுபடியாகும் காலம் நிறைவடையும் தினம் அல்லது அத்தினத்திற்கு முன் நீடிக்கப்படாதவிடத்து அறவிடப்பட வேண்டிய மேலதிகக் கட்டணம் ஒவ்வொரு மாதத்திற்கு அல்லது அதைவிட குறைந்த காலத் திற்காக | ரூ. | 100.00 |
| iv. | சாரதி பதிவுக் கட்டணம் | ரூ. | 1500.00 |
| v. | பயணிகள் போக்குவரத்து சேவை அனுமதிப் பத்திர நகல்பிரதிக் கட்டணம் | ரூ. | 500.00 |
| vi. | சாரதி பதிவு சான்றிதழுக்கான நகல் பிரதிக் கட்டணம். | ரூ. | 500.00 |

28. இந்த விதிகளின் கீழ் சொற்கள் தொடர்பாக பொருள் கோடல் ஒன்று தேவைப்பட்டாலொழிய இந்த விதிகளில் “அதிகார சபை” என்பது 1992 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வீதிப் பயணிகள் போக்குவரத்து சேவை நியதிச்சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட மேல் மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபையையும்,

“பொது முகாமையாளர்” என்பது மேல் மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் பொது முகாமையாளர், என்ற கருத்தாகும்.

29. இந்த விதியின் கீழ் சிங்களம், தமிழ் அத்துடன் ஆங்கிலம் ஆகிய பதங்களுக்கிடையே முரண்பாடு காணப்பட்டால், சிங்களச் சொல்லே முன்னுரிமை பெற வேண்டும்.

3 ஆம் பந்தி

**முதலாம் அட்டவணை**

பயணிகளை ஏற்றிச் செல்வதற்காக நிலையான சேவை ஒன்றினைப் பேணிச் செல்வதற்கான முச்சக்கர வண்டி பயண அனுமதிப் பத்திரம்

அனுமதிப் பத்திர இலக்கம் } ........................................................................................................

முச்சக்கர வண்டியின் பதிவு இலக்கம் } ........................................................................................................

உரிமையாளரின் / உரிமை தாபனத்தின் பெயர் முகவரி } ........................................................................................................
........................................................................................................
........................................................................................................

தேசிய அடையாள அட்டை இலக்கம் } ........................................................................................................

இணைக்கப்பட்டுள்ள பிரதேச காரியாலயம் } ........................................................................................................

சேவை வழங்கும் தரிப்பிடம் } ........................................................................................................

உள்ளூராட்சி அதிகாரப் பிரதேசம் } ........................................................................................................

பொலிஸ் அதிகாரப் பிரதேசம் } ........................................................................................................

அனுமதிப் பத்திரத்தின் செல்லுபடியாகும் காலம் தொடக்கம் } ........................................................

வரை } ........................................................

இந்த அனுமதிப்பத்திரம் 2002 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க வீதிப் பயணிகள் போக்குவரத்து முச்சக்கர வண்டி சேவை நியதிச்சட்டத்தின் நியமங்கள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் வழங்கப்படுகின்றது.

பற்றுச் சீட்டு இலக்கம் } 01. ............................................... 02. ......................................................


லேபல் இலக்கம் } ....................................................

இந்த அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியாகும் காலம் நிறைவடைந்த பின் மீண்டும் செல்லுபடியாக்கிக் கொள்ளாதவிடத்து அல்லது அத்தினத்திற்கு முன் மேல் மாகாணத்தின் முச்சக்கர வண்டி சேவைப் பணியகத்திற்கு தேவையான விடத்து உடனடியாக இந்த அனுமதிப்பத்திரத்தினை முச்சக்கர வண்டி சேவைப் பணியகத்திற்கு ஒப்படைக்க வேண்டும்.

வழங்கிய திகதி } ....................................................

.........................................................
பணியகத் தலைவர்,
முச்சக்கர வண்டி சேவைப் பணியகம்,
வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை,
மேல் மாகாணம்.

(இந்தப் பகுதியை தெளிவாகத் தெரியுமாறு முச்சக்கர வண்டியின் முன்பக்கத்தில் காட்சிப்படுத்த வேண்டும்.)


தொடர் இல. : ..............

අවසර පත්‍රය

Passenger Transport Service Permit for Threewheel

අවසර පත්‍ර අංකය / அனுமதி இலக்கம் / Permit No } ..............................

දිස්ත්‍රික්කය / மாவட்டம் / Distric } ..............................

.............................. { වලංගු කාලය / செல்லுபடியாகும் காலம் / Valid Till

ත්‍රීරෝද රථයේ ලි.ප. අංකය / முச்சக்கர வண்டியின் பதிவிலக்கம் / Regd. No. of Threewheel } ..............................

.............................. { පොලිස් වසම / பொலிஸ் பிரிவு / Police Division

දිනය / திகதி / Date } ..............................

பணியகத் தலைவர்
Head of Bereau

வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை - மேல் மாகாணம்

THREEWHEEL BEREAU - ROAD PASSENGER TRANSPORT AUTHORITY - WESTERN PROVINCE

இவ் அனுமதி முன் கண்ணாடியில் காட்சிப்படுத்தல் வேண்டும் To be exhibited on the windscreen

4 (1) பந்தி

**இரண்டாம் அட்டவணை**

தொடர் இலக்கம் : ........

மேல் மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபை

மேல் மாகாண பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகளின் பதிவு மற்றும் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பம்

| |
|---|
| அலுவலக பயன்பாட்டிற்காக |
| பதிவு இலக்கம் : |
| திகதி : |

1. முச்சக்கர வண்டியின் உரிமையாளர் தொடர்பான விபரம் :

   1.1 முழுப் பெயர் :

   ....................................................................................................................................................................

   1.2 நிரந்தர முகவரி : ……………………………………………………………………………………………………………

   1.3 முச்சக்கர வண்டியின் இலக்கம் : ………………………………………………………………………………………….

   1.4 சாரதி அனுமதிப்பத்திர இலக்கம் : …………………………… 1.5 வழங்கிய திகதி : ………………………………

   1.6 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ………………….. 1.7 தொலைபேசி இலக்கம்: ……………………..

2. பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் பிரதேசம் தொடர்பான தகவல்கள் : -

   2.1 பொலிஸ் அதிகாரப் பிரதேசம் : ……………………………………………………………………………………..

   2.2 உள்ளூராட்சி அதிகாரப் பிரதேசம் : ……………………………………………………………………………

   2.3 சேவை வழங்கும் தரிப்பிடம் : ………………………………………………………………………………………..

   2.4 மாவட்டம் : ………………………………………………………

3. முச்சக்கர வண்டியின் சாரதி தொடர்பான தகவல்கள் : (உரிமையாளர் அல்லது வேறு ஒருவர் பயணத்தில் ஈடுபட்டால் இந்தப் பகுதியை நிரப்புங்கள்.)

   3.1 முழுப் பெயர் : ........................................................................................................................................

   3.2 நிரந்தர முகவரி : ……………………………………………………………………………………………………………

   3.3 சாரதி அனுமதிப்பத்திர இலக்கம் : …………………………….

   3.4 வழங்கிய திகதி : ………………………………………………..

   3.5 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : …………………..

   3.6 தொலைபேசி இலக்கம்: ……………………………………….

நான் வழங்கிய மேற்கூறிய தகவல்கள் உண்மை மற்றும் சரியானது என்று அறிவிக்கிறேன். பயணிகள் சேவை அனுமதிப் பத்திரத்தின் விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் நான் ஏற்றுக்கொள்கிறேன், மேலும் எனக்கு பயணிகள் போக்குவரத்து சேவை அனுமதிப் பத்திரம் ஒன்றினை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

..........................................
உரிமையாளரின் கையொப்பம்

திகதி : ............................

4. ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் பின்வரும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்;

   1. முச்சக்கர வண்டியின் பதிவுச் சான்றிதழின் மூலப் பிரதி மற்றும் போட்டோ பிரதி;
   2. முச்சக்கர வண்டியின் உரிமையாளரின் தேசிய ஆள்ளடையாள அட்டையின் மூலப் பிரதி மற்றும் போட்டோ பிரதி;
   3. செல்லுபடியான காப்புறுதிச் சான்றிதழின் மூலப் பிரதி மற்றும் போட்டோ பிரதி;
   4. முச்சக்கர வண்டியின் தகைமைச் சான்றிதழ்;
   5. செல்லுபடியான இறைவரி அனுமதிப் பத்திரத்தின் மூலப் பிரதி மற்றும் போட்டோ பிரதி;
   6. சாரதியின் செல்லுபடியான சாரதி அனுமதிப் பத்திரத்தின் மூலப் பிரதி மற்றும் போட்டோ பிரதி;
   7. சாரதியின் வைத்திய சான்றிதழின் மூலப் பிரதி மற்றும் போட்டோ பிரதி;
   8. உரிமையாளரின் வதிவிடத்தினை உறுதிப்படுத்துவதற்கான கிராம அலுவலரின் சான்றிதழின் மூலப் பிரதி.

   **முக்கியம் :** கிராம அலுவலரின் சான்றிதழின் மூலப் பிரதியைத் தவிர ஏனைய ஆவணங்களின் மூலப் பிரதிகள் பரிசோதித்துப் பார்த்து பின் மீண்டும் ஒப்படைக்கப்படும்.

---

<u>அலுவலக பயன்பாட்டிற்கு மட்டும்</u>

மேற் கூறப்பட்ட விபரங்கள் மற்றும் ஆவணங்கள் என்னால் பரிசோதித்துப் பார்க்கப்பட்டன. .......................... ஆந் திகதி தொடக்கம் ...................................... ஆந் திகதி வரை பயணிகள் போக்குவரத்து அனுமதிப்பத்திரத்திற்காக ரூபா. ....................... நிதி அறவிட்டு பற்றுச் சீட்டை வழங்குங்கள்.
தயாரித்தவர் ..........................................

............................................. ...........................................
விடயப் பொறுப்பு இலிகிதர் பணியகத்தின் தலைவர்/பிரதேச முகாமையாளர்.

திகதி : ....................................

---

ரூபா. ........................... நிதி அறவிடப்பட்டு ................................ ஆம் இலக்க பற்றுச்சீட்டு வழங்கப்பட்டது.

திகதி : ................................ ........................................
நிதிப் பொறுப்பாளர் / காசாளர்.

---

இலக்கம் .......................... ஆகிய முச்சக்கர வண்டி பதிவு இலக்கம் ................................ இன் கீழ் பதிவு செய்யப்பட்டு ......................... ஆந் திகதி தொடக்கம் .............................. ஆந் திகதி வரை ...................................... ஆம் இலக்க அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

திகதி : ................................ ..................................................
பணியகத்தின் தலைவர் / பிரதேச முகாமையாளர்.

முச்சக்கர வண்டிச் சேவை பணியகம் - மேல் மாகாணம்
சாரதி பதிவுச் சான்றிதழ்

சாரதியின் பெயர் : ......................................................................................................

சாரதியின் முகவரி : ......................................................................................................

முச்சக்கர வண்டியின் இலக்கம் : ...........................................................................

சாரதி பதிவு இலக்கம் : .................................................................................................

தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ..........................................................

சாரதி அனுமதிப்பத்திர இலக்கம் : ..........................................................................

பொலிஸ் அதிகாரப் பிரதேசம் : ...............................................................................

வழங்கிய திகதி : ........................................

அனுமதிப்பத்திரம் வழங்கிய தினத்திலிருந்து ஒரு வருட காலத்திற்கு செல்லுபடியாகும்.

..................................................
பணியகத்தின் தலைவர் - முச்சக்கர வண்டி பணியகம்

மேல் மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபை,
இல. 89,
“ரண்மகபாய”,
கடுவெல வீதி,
பத்தரமுல்ல.

தொலைபேசி இலக்கம் : ......................................
பெக்ஸ் இலக்கம் : ......................................

EOG 12 - 0149/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.